## <u>அது என்ன?</u>

குடிமைச் சமூகத்தின் எதிர்ப்பு சாதாரண மக்கள் தங்களது உரிமைகள், சுதந்திரம் மற்றும் நீதி ஆகியவற்றிற்காக வன்முறை இன்றிப் போராடும் முறையாகும். மிகப் பரந்துபட்ட சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களுக்காகப் போராடும் குடிமைச் சமுகம் தனது எதிர்ப்பைக் காட்ட, வேலைநிறுத்தம், பகிஷ்கரிப்பு, மாபெரும் ஆர்ப்பாட்டங்கள், மற்ற பிற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. உலகம் எங்கிலும், குடிமைச் சமூக எதிர்ப்பு, வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. அகிம்சைப் போராட்டம், நேரடி நடவடிக்கை, மக்கள் சக்தி, அரசியல் எதிர்ப்பு மற்றும் குடிமைச் சமூக அணி திரட்டல் என்று பலவாறு இருக்கிறது. எந்தப் பெயர் வைத்து அழைத்தாலும், குடிமைச் சமூக எதிர்ப்பு என்பது அடிப்படையில் ஒன்றாகவே இருக்கிறது.

குடிமைச் சமூக எதிர்ப்பு என்பது சக்தி வாய்ந்தது. ஏனென்றால், ஒடுக்கப்படுதலை எதிர்க்கப் பெரும் என்ணிக்கையிலான மக்களின் பங்களிப்பை அது ஈர்க்கிறது. மக்களுக்கு மேலும் சுதந்திரமான, நியாய உணர்வுள்ள சமூகத்தை மாற்றாக வைப்பதுடன், பழைய ஆட்சி அதிகாரங்களை அமல்படுத்திய விசுவாசிகளையும் எதிர்க்கிறது. நியாமற்ற ஆட்சியாளர்களுடனான ஒத்துழைப்பை நிறுத்த மக்கள் முடிவு செய்தால், அந்த முறைமையைச் செயல்படுத்துவதற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

குறிப்பிட்ட அளவுக்கு மக்கள் கீழ்ப்படிய மறுத்தால், நிர்வாக அமைப்பு செயல்பட முடியாது போகும். அப்போது, மாறுவதோ அல்லது வீழ்ச்சியடைவதோதான் விளவாக இருக்கும். குடிமைச் சமூகத்தின் எதிர்ப்பு முறையின் எதிர்ப்பாளர்கள், ஆயுத பலம், பணபலம் பெற்றிருந்தாலும், பொதுமக்களின் தொடர் கீழ்ப்படியாமை, திட்டமிட்ட வகையில் பரந்துபட்ட அகிம்சை முறையிலான எதிர்ப்பு ஆகியனவற்றைச் சமாளிக்க முடியாமல்போனது பல முறை நடந்திருக்கிறது.

பல குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கங்கள் மற்றும் பிரச்சாரத் திட்டங்கள், பல்வேறு வகையான எதிர்ப்பாளர்களை எதிர்த்து வெற்றி பெற்றிருக்கிறது. கடந்த நூற்ராண்டின் ஒவ்வொரு பத்தாண்டு கால கட்டத்திலும், ஆறு கண்டங்களிலும், அகிம்சை முறைகளைக் கையாண்டு, மக்கள் இயக்கங்கள் சர்வாதிகார ஆட்சி அமைப்புகளைத் தூக்கியெறிந்திருக்கின்றன. ராணுவ ஆக்கிரமிப்புகளை வெற்றிகரமாக எதிர்த்து நின்றிருக்கின்றன. இதன் மூலமாக அவர்களது சமூகங்களுக்கு, மேம்பட்ட நீதி, சுதந்திரம் ஆகியவற்றைப் பெற்றுத் தந்திருக்கின்றன.


உதாரணமாக, தென்னாப்பிரிக்காவில் நிறவெறியை முடிவுக்குக் கொண்டுவருவதில் குடிமைச் சமூக எதிர்ப்பு மிக முக்கியப் பங்காற்றியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில், பெண்களுக்கான உரிமைகள், குடிமைச் சமூக உரிமைகள், தொழிலாளர்களுக்கான உரிமைகள் ஆகியனவற்றைப் பெறக் காரணமாக இருந்தது. பிலிப்பைன், சிலி, இந்தோனேஷியா, செர்பியா மற்றும் பிற நாடுகளில் சர்வாதிகாரிகள் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது. டென்மார்க், கிழக்கு தைமூர் ஆகிய நாடுகளில் அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்புகளைத் தடுக்க முடிந்தது. இதுதான், பிரிட்டனிடமிருந்து இந்தியா சுதந்திரம் பெற மிக முக்கியக் காரணமாக இருந்தது. கிழக்கு ஐரோப்பாவில் நடந்த பல மோசடியான தேர்தல்கள் ரத்தாகக் காரணமாக இருந்தது. லெபனானை ஆக்கிரமித்திருந்த சிரியா வெளியேறக் காரணமாக இருந்தது. மனித உரிமைகளையும் நீதி, ஜனநாயக முறையிலான சுயாட்சி ஆகியனவற்றை நிலைநிறுத்தவும் பல நாடுகளில் இந்த முறை பயன்பட்டது.


## <u>முக்கியக் கருத்தமைவுகள்</u>

**குடிமைச் சமூக எதிர்ப்பும் ஒழுக்கம் சார்ந்த அகிம்சையும்:**
குடிமைச் சமூக எதிர்ப்பு, ஒரு அரசியல் கருத்தாக்கம். ஒழுக்கம் சார்ந்த அகிம்சை என்பது, வன்முறையைத் தடுக்கும் நெறிமுறைக் கோட்பாடுகள். இந்திய சுதந்திரப் போராட்டம், அமெரிக்க குடிமைச் சமூக இயக்கங்கள் ஆகியனவற்றில் கலந்துகொண்டவர்கள், இந்த நெறிமுறைக் கோட்பாடுகளை போதித்தனர். ஆனால், குடிமைச் சமூக எதிர்ப்பின் பயன்பாட்டில் பங்கு கொள்பவர்கள் தங்களது சுயத்துக்காக இதைப் பின்பற்ற வேண்டும் என்பது இதனுள் பொதிந்தில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையாகச் சொன்னால், குடிமைச் சமூக எதிர்ப்பாளர்களில் பெரும்பாலோர், இதன் நெறிமுறைக் கோட்பாடுகளால் கவரப்பட்டவர்கள் அல்ல. ஆனால் அவற்றை ஏற்றுக்கொண்டதன் காரணம், அவர்கள் போராடுவதற்கு இது மிகச் சிறந்த போராட்ட முறை என்று நம்பியதுதான்

### அதிகாரம் பற்றிய ஒற்றைக்கூறு மற்றும் பன்முகத்தன்மை கொண்ட கருத்துக்கள்:

பல சமூகங்களில் அதிகாரம் என்பது ஒற்றைக்கூறு என்ற கருத்து நிலவுகிறது. அதாவது சாதாரண மக்கள், அவர்களது அரசாங்கம், பிற அதிகார அமைப்புகள் ஆகியவற்றின் நல்லபிப்பிராயம், முடிவுகள், ஆதரவு ஆகியவற்றைச் சார்ந்துதான் இருக்கிறோம் என்று


Regime
FIG.1
The People


Regime
FIG.2
The People

நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரம் என்பது, அதிகாரம் செலுத்தக்கூடிய பீடத்தின் உச்சியில் இருக்கும், பெரும் செல்வத்தை வைத்திருக்கும், அளவிட முடியாத வன்முறையைக் கட்டவிழ்த்துவிடும் திறன் பெற்ற ஓரிருவரிடம் இருப்பதுதான் என்று நினைக்கின்றனர். ஒற்றைக் கூறு அதிகார அமைப்பு, சுயமாக, நிரந்தரப்படுத்திக்கொள்ளும். பல காலத்திற்கு மாறாமல் இருக்கும். அவ்வளவு எளிதில் மாற்ற முடியாததாக இருக்கும். ஆனால் குடிமைச் சமூகத்தின் எதிர்ப்பு என்பது அதிகாரத்தின் தன்மை பன்முகத்துவமானது என்ற அடிப்படையில் இருக்கும். இதன்படி, அரசுகளும் அதிகார அமைப்புகளும், மக்களின் கீழ்ப்படிதல், ஏற்றுக்கொள்ளல் ஆகியவற்றைச் சார்ந்தே இருக்கிறது. பன்முகத்துவ கருத்துப்படி, சமூகத்தின் பல பகுதிகளில், சரிபார்த்தல் மற்றும் பங்கெடுத்துக்கொள்ளல் ஆகியவற்றின் அடிப்படையில் உள்ளது. இது நிலையற்றது மட்டுமின்றி, அதன் வலிமை, அதன் மூல ஆதாரங்கள், மறுபடியும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்றால், பல அமைப்புகளின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. குடிமைச் சமூக எதிர்ப்பாளர் இயக்கங்கள், அரசாங்கத்தின் நடவடிக்கைகளைத் தடுத்து, அவற்றை பலமிழக்கச் செய்வதற்கு, திரும்பப் பெறுவதற்கு, சாதாரண குடிமைச் சமூகத்தினர் எந்த வகையான பரந்துபட கூட்டை, எந்தக் கருத்துருவின் அடிப்படையில் உருவாக்குகிறார்கள் என்பதை வைத்தே, அவைகளின் திட்டங்கள் இருக்கும்.

**செய்யாது இருப்பதும், செய்வதும்:**

வரலாற்று ரீதியில் பார்த்தால், குடிமைச் சமூக எதிர்ப்பாளர்கள் தங்களுக்கு வேண்டியதைச் சாதிக்கப் பல உபாயங்களைக் கையாண்டிருக்கிறார்கள். இதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். குறிப்பிட்ட காரியங்களைச் செய்யாமல் இருப்பது, சில காரியங்களைச் செய்வது என்று கூறலாம். செய்யாமல் விடும் காரியங்கள் என்று சொன்னால், மக்கள் சாதாரணமாகச் செய்யும், செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும், காரியங்களைச் செய்யாமல் நிறுத்துவது. உதாரணமாக, தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், வரி கொடுக்க மறுப்பது, நுகர்வோர் பொருட்களை பகிஷ்கரிப்பது ஆகியன.

அதுபோல, சாதாரணமாகச் செய்யாத காரியங்களை வேண்டுமென்றே செய்வது. உதாரணமாக, ஆர்ப்பாட்டம், உள்ளிருப்புப் போராட்டம், மறியல், குடிமைச் சமூக எதிர்ப்பாளர்களின் ஒத்துழையாமை சார்ந்த பிற போராட்டங்களில் ஈடுபடுவது. இது போன்ற உபாயங்களைத் தேவைக்கு ஏற்றவாறு, கடைப்பிடித்து, நிலையை மாற்றாமல் வைத்திருக்க வேண்டும் என்று நினைக்கும் எதிர்ப்பாளர்களுக்கான செலவினங்களை அதிகப்படுத்துவதுபோல இந்த நடவடிக்கைகள் இருக்கும். இவ்வாறு

செய்வதன் மூலம் சாதாரண மக்களும் இப்போராட்டங்களில் கலந்துகொள்ள உத்வேகம் பெறச் செய்ய முடியும். போராட்ட முறைகளில் பல்வேறு வகைகள் இருப்பது, ***இவற்றில் குறைவான ஆபத்து சூழ்நிலை குறைவானதாக, அதிகமானதாக என்றும்,*** அரசு, தனியார், குறிப்பிட்ட இடத்தில் குவிக்கப்பட்ட முறையில், பரந்துபட்ட வகையில் என்று சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் பங்குகொள்ளும் வகையில் என்றும் நிலைமைக்குத் தக்க வகையில் போராட்டங்கள் நடத்த முடியும்.

**ஒற்றுமை, திட்டம், அகிம்சை முறைமை**

வெற்றிகரமான குடிமைச் சமூக எதிர்ப்பு இருக்க வேண்டும் என்றால், ஒற்றுமை, திட்டம், கட்டுப்பாடுள்ள அகிம்சைச் செயல்பாடு. ஆகிய மூன்று கோட்பாடுகளையும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும். ஒற்றுமை என்பது சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களைத் திரட்டுவதன் மூலம் உருவாக்க முடியும். இவர்களுக்கு ஆரம்பத்தில் அடையக்கூடிய வகையில் குறிக்கோள்கள் தொடர்பான வெவ்வேறு வகையான குறைகள் இருக்கலாம். திட்டம் என்பது, செயல்படுவதற்கான வாய்ப்புகள், நிலைமைகள் ஆகியவற்றின் கவனமான ஆய்வுக்குப் பின் அதற்கேற்ற வகையில் உபாயங்களையும், பிரச்சாரங்களையும், வரிசைப்படுத்தித் தயாராவதுதான். இதனுடன் கூட பின்னடைவுகளை எதிர்பார்த்து, அதற்கேற்ற மாற்றுத் திட்டஙளையும் வகுப்பதுதான். அகிம்சை கட்டுப்பாட்டு முறைமை என்பது, எந்த வகைப் போராட்டமாக இருந்தாலும், அது அகிம்சையை மட்டுமே சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பது அடிப்படை. ஏனென்றால், வன்முறை, மக்களின் பங்களிப்பைக் குறைத்துவிடும். இயக்கத்தின் சட்டபூர்வ உரிமைக்குத் தீங்கு ஏற்படுத்தும். சர்வதேச அளவிலான ஆதரவைக் குறைக்கும். விசுவாசங்கள் இடம்மாறுவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கும்.

பத்துக் கேள்விகள்.

1) **சாதாரண மக்கள்ளின் குடிமைச் சமூக எதிர்ப்பு முறைப் பயன்பாட்டால் அதிகாரம் மிகுந்த ஆட்சியாளர்கள் எவ்வாறு தோற்கடிக்கப்பட்டார்கள்?**

எத ஆட்சியாளருமே, இயல்பாகவே சர்வ அதிகாரமும் பெற்றவரில்லை. அவர்கள் அதிகார பலம் பெற்று இருப்பதற்கு முக்கிய காரணம் மில்லியன்கணக்கான மக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு இருப்பதுதான். ஆட்சியாளர் நாட்டைத் தனது கட்டுப்பாட்டில் வைக்க வேண்டுமானால், காவல் துறை, ராணுவம், நீதித் துறை, அரசு அதிகாரிகள் ஆகியோர் தங்களீன் பணிகளைச் செய்ய வேண்டும். சமுதாய மக்கள்

அனைவருமே, அவரவர்களின் பணிகளை தொடர்ந்து செய்ய வேண்டும். வரிகளையும், வாடகை கட்டணங்களையும் முறையாகச் செலுத்த வேண்டும். சந்தையில் அரசின் உரிமம் பெற்று தயாரித்த பொருள்களை வாங்க வேண்டும். கப்பல் மற்றும் தரை வழிப் போக்குவரத்துத் துறைகள் தகவல் தொடர்புத் துறை ஆகியவற்றில் பணி செய்பவர்கள், தொடர்ந்து சரக்குகளை வேண்டிய இடங்களுக்குத் தொடர்ந்து கொண்டு சேர்ப்பதை செய்வது, சேவைகளை அளிப்பது ஆகியவற்றைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

எந்த ஒரு அரசும் செயல்பட வேண்டுமானால் இப்படிப் பல துறைகள் சரியான முறையில் செயல்பட வேண்டும்.

இதைப் புரிந்துகொண்ட குடிமைச் சமூக எதிர்ப்பு அமைப்பாளர்கள், இந்த ஆதரவுச் செயல்பாடுகளை நிலைதடுமாறச் செய்யும் திட்டங்களை உருவாக்கி, இருக்கும் நிலை தொடர்வதைக் கடினமானதாக்க வேண்டும். பெரும் எண்ணிக்கையில் மக்களைத் திரட்டி, மறுதலிக்க வைப்பது, எதிர்ப்புகளை வெளிப்படுத்தச் செய்வது ஆகியன, ஆட்சியாளரின் சடபூர்வத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கும். குறிப்பாக மக்கள் தங்களது உரிமைகளைப் பயன்படுத்தும்போது அவர்கள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டால், இந்த நிலை மோசமாகும். இதுபோல அரசின் கட்டுப்பாட்டை நிலை தடுமாறச் செய்தால், அரசின் நிர்வாகக் கட்டமைப்பைத் தொடர்ந்து செயல்படச் செய்ய அதிகமாகச் செலவு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ள முடியும். இது குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகமானால், அரசை ஆதரிபவர்கள்கூட அதன் எதிர்காலத்தைக் குறித்துக் கேள்வி எழுப்புவார்கள். இவ்வாறு அவர்களது விசுவாசம் குறைவுபட்டால், அதன்பின் எந்த வகையான அடக்குமுறையையும் தொடர்ந்து அமல்படுத்துவது மிகவும் சிரமமானதாக இருக்கும்.

**2) குடிமைச் சமூக எதிர்ப்பு எவ்வாறு துவங்குகிறது?**

வெற்றிகரமான பல குடிமைச் சமூக இயக்கப் பணிகள், சாதாரண மக்கள் நடவடிக்கைகளில் ஈடுபடத் தேவையான திறனை வளர்க்கத் துவங்குவதிலிருந்து ஆரம்பிக்கிறது. உள்ளூரில் மட்டத்தில் குறைந்த அபாயத் தன்மை கொண்ட உபாயங்களின் அடிப்படையில் மக்களைத் திரட்டி, அதன் மூலம் ஒற்றுமையை வளர்ப்பது மிக முக்கியம். உதாரணமாக, காந்திஜி, இந்தியாவில் குடிமைச் சமூக எதிர்ப்புப் போராட்டங்களைத் துவங்கும் முன்னர், அவர் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று பலதரப்பட்ட மக்களை சந்தித்து அவர்களுடன் உரையாடி அவர்களுடைய பிரச்சினைகளையும், கவலைகளையும், நம்பிக்கைகளையும் கேட்டறிந்தார். அவர்களது ஒத்துழைப்பையும்,

விசுவாசத்தையும் எப்படிப் பெறுவது என்பது பற்றிய அறிதலை வளர்த்துக்கொண்டார்.

அரசின் மேல் நம்பிக்கை இழந்து, அதே சமயம் அது குறித்து எதுவுமே செய்ய முடியாது என்று பலவீனமான மன நிலையில் உள்ள மக்களை ஆக்கப் பணிகளில், அதாவது தற்சார்பை வளர்க்கும் சமூக சேவைகளில் ஈடுபட வேண்டும் என்று காந்தியடிகள் ஊக்குவித்தார். இத்தகிய மக்கள் தொடர்பும் பிரச்சாரமும் நேரடியாகக் குடிமைச் சமூக எதிர்ப்பில் மக்களை ஈடுபடும் வகையில் மக்களின் திறனை வளர்க்கும் அளவுக்கு வந்ததும் குடிமைச் சமூக எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ளலாம். தொடக்கத்தில் பெரும்பாலான மக்களின் கருத்தோடு ஒத்துப்போகக்கூடிய உள்ளூர்ப் பிரச்சினைகளை மையமாக வைத்து இந்த எதிர்ப்புச் செயல்பாடுகள் இருக்கும். உதாரணமாக போலந்தின் ஒற்றுமை இயக்கத்தின் ஒருங்கமைப்பாளர்கள், அதன் செயல்பாட்டை ஒரு கப்பல்கட்டும் துறை ஒன்றில் வேலைநிறுத்தம் செயவதிலிருந்து ஆரம்பித்தனர்.

அங்கு ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை வைத்து செய்யப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றிபெற்று, தனியான சுதந்திரமான தொழிற்சங்கம் நிறுவப்பட்டது. இந்த வெற்றி போலந்து நாடு முழுவதும் அம்மக்களிடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக அந்த இயக்கம் மிகப் பெரிய வலிமையைப் பெற்றது. ,

அதே போல அமெரிக்காவிலும் குடிமைச் சமூக எதிர்ப்பாளர்கள், தென் மாகாணங்களில் உள்ள சில நகரங்களில், கடைகள், பேருந்துகளில் கடைபிடிக்கப்பட்ட இனம் சார்ந்த தனி இட ஒதுக்கல்களுக்கு எதிராகப் போராடினார்கள். உள்ளிருப்புப் போராட்டங்கள், பகிஷ்கரிப்பு ஆகியவற்றின் மூலம் இந்த இன அடிப்படையிலான ஒதுக்கல்கள் முடிவுக்கு வந்தன. இந்த வெற்றிகள் குடிமைச் சமூக எதிர்ப்பின் சக்தியை வெளிப்படுத்தியன. இது மிக விரைவாக தேசிய அளவிலான கவனத்தைப் பெற்றது. அதையடுத்து இம்முறையைப் பலரும் பின்பற்றுதலும் விரைவாக நடந்தது.

3) **இந்த ஆர்ப்பாட்டங்களை நான் எப்படி முன்னெடுத்துச் செல்வது?**

ஒரு இயக்கத்தின் அடிப்படைத் திட்டங்களை உருவாக்குபவர்கள், தங்களது இலக்குகள், தங்களது இயக்கத்தின் திறன்கள், பலம், பலவீனங்கள், எதிர்த் தரப்பினரைப் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை முதலில் அடையாளம் காண வேண்டும். தங்களுக்குக் கிடைக்கக்கூடிய மூன்றாம் நபர் ஆதரவு பற்றியும் அறிந்து வைத்திருக்க வேண்டும். ஒரு இயக்கம், தனது குறுகிய, இடைக்கால மற்றும் நீண்ட கால இலக்குகளைப் பற்றித் தெளிவான,

உண்மை நிலை சார்ந்த வகையில் வரையறுத்துக்கொண்டு, சூழ்நிலை குறித்து சரியான, விளக்கமான, முறைப்படுத்தப்பட்ட, உண்மை நிலை சார்ந்த ஆய்வுக்குப் பின்னர்தான், என்ன விதமான உபாயத்தைக் கையாளுவது என்பதை முடிவு செய்யும் நிலைக்கு வர இயலும். அந்தச் சமயத்தில், குறிப்பிட்ட விஷயத்தை எதிர்க்க ஆர்ப்பாட்டங்கள்தான் சரியான வழி என்று முடிவு செய்தால், அதை எப்படி வெற்றிகரமான முறையில் செய்து முடிப்பது என்று தெரிய வேண்டுமானால், அதற்கு தொழில்நுட்ப மற்றும் உபாயங்கள் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள பல வழிகள் இருக்கின்றன.

### 4) ஆர்ப்பாட்டங்கள் இல்லையானால் வேறு என்ன?

### குடிமைச் சமூக எதிர்ப்பு

இயக்கங்களின் அடிப்படைப் பணியே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்தாம் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் என்பது குடிமைச் சமூக எதிர்ப்பாளர்கள் பயன்படுத்தும் பல்வேறு விதமான போராட்ட உபாயங்களில் ஒன்று மட்டுமே. அகிம்சை வழியிலான போராட்ட முறைகளில் இருநூறுக்கும் மேற்பட்ட உபாயங்கள் இருக்கின்றன. பகிஷ்கரிப்பு என்றால் பல்வேறு வகைப்பட்டவை இருக்கின்றன. (நுகர்வோர், அரசியல், சமூகம்). வேலைநிறுத்தங்கள், மெதுவாகப் பணி செய்வது, வாடகை, வரி, கட்டணங்கள் வழங்க மறுப்பது; மனுக்கள் சமர்ப்பிப்பது, குடிமைச் சமூகக் கீழ்ப்படியாமை, உள்ளிருப்புப் போராட்டங்கள், மறியல்கள், ஏற்கெனவே செயல்படும் துறைகளுக்கு இணையான அமைப்புகளை ஏற்படுத்துவது ஆகியன குடிமைச் சமூக எதிர்ப்பின் சில முறைகளாகும்.

எந்த விதமான போராட்ட முறையை, எந்தக் கட்டங்களில் கையாளுவது என்பது அவற்றை முன்னெடுக்கும் இயக்கங்கள், நிலைமை, நோக்கங்கள் ஆகியன குறித்து ஆய்வு செய்து முடிவெடுப்பார்கள். இயக்கம் பலமாக இல்லையானால், ஆபத்து குறைவான உபாயங்களை முன்னெடுக்கலாம். உதாரணமாக, பகிஷ்கரிப்பு, ஆட்சேபத்துக்குரிய சின்னங்களை மறைமுகமாக விளம்பரப்படுத்துவது போன்றவை மூலமாக இயக்கத்தின் திறன்களை வளர்க்கவும், இயக்கத்தின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கவும், அல்லது தங்களது எதிர்த் தரப்பினருக்கு தடைகளை ஏற்படுத்தவும் முயற்சிப்பார்கள். அடுத்தடுத்த காலகட்டங்களில் இயக்கம் வலுவடைந்த பின், இன்னும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். உதாரணமாக, பேரணிகள், அணிவகுப்புகள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பொது குடிமைச் சமூகக் கீழ்ப்படியாமை போன்ற போராட்ட முறைகளாகக் கையெடுக்கலாம்.

ஆர்ப்பாட்டங்கள்தாம் குடிமைச் சமூக எதிர்ப்பை வெளிப்படுத்தப் பெரும்பாலான நேரங்களில் கடைபிடிக்கப்படும் அனைவருக்கும் தெரிந்த வழி என்பதால், இதுதான் ஒரே வழி என்றோ, இருப்பதிலேயே சிறந்த வழி என்றோ கருதக் கூடாது. சூழ்நிலையின் அடிப்படையில், இயக்கத்திற்கு இதைவிடக் குறைவான செலவில், சிறந்த விளைவை ஏற்படுத்தும் பல முறைகள் இருக்கின்றன. எந்த விதமான போராட்ட முறையைப் பயன்படுத்துவது என்பதை முடிவு செய்ய, படைப்புத் திறன் மற்றும் அடிப்படைத் திட்டமிடும் சிந்தனைத் திறன் ஆகியன மிகவும் முக்கியம்.

### 5. இயக்கத்திற்கு மக்களைக் கவரக் கூடிய தலைமை இல்லையானால் என்ன செய்வது?

மிகப் பல வரலாற்று சிறப்பு மிக்க இயக்கங்கள், குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கங்கள் கவர்ச்சி மிகுந்த தலைமை இல்லாமலேயே பயனுள்ள முறையில் செயல்பட்டன. தெனாப்பிரிக்காவில் நிறவெறியை எதிர்த்து நடந்த அறப் போர் இயக்கத்தின் தலைவர், இயக்கத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த இயக்கம் பெரும் காரியங்களைச் சாதித்தது. இயக்கத் தலைவர்களிடத்திலுள்ள தனிப்பட்ட ஈர்ப்பு சக்தி, பேச்சுத் திறன், ஆகியவற்றைவிட, இயக்கத்திலுள்ள பல்வேறு தரப்பினரை கவனித்தறிவது, பிரதிநிதித்துவப்படுத்துவது, எந்த வித நடவடிக்கையாக இருந்தாலும் அவற்றின் லாப நஷ்டங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பது, தேவையானால், மாற்று வழிகளைக் கண்டறிவது, முடிவெடுப்பதில் உள்ளூர் தலைவர்களையும் கலந்து கொள்வது போன்றவையும் முக்கியம்.

மேலும், கவர்ச்சி மிகுந்த தலைமையை அதிகம் சார்ந்திருப்பதும் ஆபத்தானதுதான். சில சமயங்களில், இப்படிப்பட்ட தலைவர்கள், ஆட்சியில், அதிகாரத்தில் பங்கு என்ற அடிப்படையில், ஆட்சியாளர்களால் வசப்படுத்தப்படலாம். அல்லது கைது செய்யப்படலாம். தாங்கு சக்தியுள்ள, மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இயக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான், அதன் தலைவர்கள் ஒதுக்கப்பட்டாலும் இயக்கங்கள் புதிய தலைவர்களை முன்னுக்குக் கொண்டுவர முடியும்.

### 6. எனது நாட்டில் குடிமைச் சமூக எதிர்ப்பு முறைக்குப் பயனிருக்காது என்று நினைத்தால் என்ன செய்வது?

குடிமைச் சமூக எதிர்ப்பு எல்லாச் சமயங்களிலும் வெற்றி பெறும் என்று சொல்ல முடியாது. ஆனால், இந்த முறையால் நிச்சயம் பயன் இருக்காது என்று பல "நிபுணர்கள்" சொல்லிய நாடுகளில்கூட இது வெற்றி பெற்றிருக்கிறது. சிலியின் ஜெனரல் அகஸ்டோ பினோசெட் உலக

சர்வாதிகாரிகளிலேயே மிகக் கொடியவர் என்று கருதப்பட்டவர். குடிமைச் சமூக எதிர்ப்புகளால் அவரை நீக்க முடியாது என்று பலரும் நினைத்தனர். அன்னல் நடந்தது அதுதான்.

அதே போல, பால்கனைச் சிதைத்தவர் (Butcher of Balkans) என்று பட்டப் பெயர் பெற்ற, செர்பிய நாட்டின் சர்வாதிகாரி, ஸ்லோபோடன் மிலோசெவிக், அகிம்சைப் போராட்ட அழுத்தத்தால் வெளியேற்றப்படுவார் என்று யாரும் சந்தேகித்திருக்க மாட்டார்கள். ஆனாலும், 2000ஆவது ஆண்டில் அவரைப் பதவியை விட்டு விலக வேண்டும் என்று பல லட்சக்கனக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது, மிலோசெவிக், அந்த ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்குமாறு தனது போலிஸ் மற்றும் ரானுவத்தினக்குக் கட்டளையிட்டார். ஆனால் மிகப் பெரிய மக்கள் கூட்டத்தைப் பார்த்து, ராணுவத்தினர் அவரது உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்தனர்.

அதன் பின் மிலோசெவிக் வேறு வழியின்றிப் பதவியிலிருந்து விலக நேரிட்டது இன்னமும் உங்களுக்கு குடிமைச் சமூக எதிர்ப்பு முறையில் சந்தேகம் இருந்தால், அதற்கான மாற்று முறைகளையும், அவையெல்லாம் உண்மையில் உதவுமா, அரசியல் முறையை உள்ளுக்குள் இருந்து சரி செய்யுமா என்பதையும் பற்றி பரிசீலனை செய்யுங்கள். தேர்தல்களில் பங்குகொள்வது; சட்ட ரீதியாக வழக்குத் தொடர்வது, எதிர்த் தரப்பினரிடம் பேச்சுவார்த்தை நடத்துவது, சர்வதேச ஆதரவைப் பெற வேண்டுகோள் விடுப்பது, ஆயுதம் ஏந்திய கலகம் செய்வது போன்றவற்றை உலகத்தின் பல பகுதிகளிலும் முயற்சி செய்திருக்கிறார்கள். குடிமைச் சமூக எதிர்ப்பு முறை வெல்லுமா என்பதில் நிச்சயம் இல்லை என்றாலும், பிற போராட்ட முறைகளினால் வெல்ல முடியும் என்பதும் நிச்சயம் இல்லை.

எதிர்க் கட்சி அல்லது, அதிருப்தியாளர் குழுவின் முடிவு மிகக் கவனமாக எடுக்கப் பட வேண்டும். அதன் மூலம் பலதரப்பட்ட மக்கள் மிக அதிக எண்ணிக்கையில் அவர்களைப் பின்பற்றுமாறு இருக்க வேண்டும். மக்களை ஒடுக்குபவரின் சட்டபூர்வ அங்கீகாரத்தைக் கேள்விக்குட்படுத்துவது, அடக்குமுறைகளைத் தவிர்ப்பது அல்லது நீர்த்துப் போகச் செய்வது, தற்போதைய அதிகார அமைப்பை ஆதரிப்பவர்களுக்கிடையில் பிரிவினைகளை உண்டாக்குவது போன்றவற்றைச் சாத்தியமாக்கும் வகையில் இந்த முடிவு இருக்க வேண்டும். வரலாறு முழுவதுமே, பல எதிர்ப்பாளர் குழுவினர் இத்தகைய தெரிவுகளைப் பரிசீலனை செய்து குடிமைச் சமூக எதிர்ப்பு முறையைத் தேர்வு செய்துள்ளனர். சில சமயங்களில் இந்த முறையோடு, அரசியல் மாற்றத்துக்கான மரபு ரீதியிலான வழிமுறைகளான, தேர்தல்கள், சட்ட ரீதியிலான வழக்குகள்,

பேச்சுவார்த்தைகள், உள்ளிருந்துகொண்டே முறைமைகளை மாற்றுவது ஆகியவற்றையும் சேர்ந்து செய்வது ஆகியவற்றைக் கையாளுகிறார்கள்.

**7) எனது எதிரி வன்முறையைப் பயன்படுத்தினால் என்ன செய்வது?**
உங்களது எதிரித் தரப்பினர், ஏதாவது ஒரு கட்டத்தில், வன்முறையைப் பயன்படுத்துவார் என்பதை நீங்கள் எதிர்பார்க்க வேண்டும். வரலாற்று ரீதியிலாக இதுதான் எப்போதும் நடந்திருக்கிறது. ஆனாலும் எதிரி வன்முறையைப் பிரயோகித்தால் குடிமைச் சமூக எதிர்ப்பு முறை தோற்றுவிட்டது என்று அர்த்தம் இல்லை. வன்முறை சார்ந்த ஒடுக்குமுறையை எதிர்கொள்ளும் பல்வேறு முறைகளால் அதன் பயனைக் குறைப்பது, அடக்குமுறையைக் கையாள்பவர்களையே பாதிப்படையச் செய்வது என்ற வகையில் குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கங்கள் இருக்கும்.

மறைமுகமான வன்முறை மூலமான அடக்குமுறையைத் தவிர்க்கவும், வலுவிழக்கச் செய்யவும் குடிமைச் சமூக இயக்கங்கள் செய்ய, முதலில் வன்முறையால் அடக்க முடியாத உபாயங்களைப் போராட்ட முறைகளாகப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, நுகர்வோர் பொருட்கள் புறக்கணிப்பு. இதில் மக்கள் தாங்கள் குறிப்பிட்ட பொருட்களை வாங்காமல் தவிர்த்துவிடுவார்கள். இதையெல்லாம் ஒடுக்குவது மிகக் கடினமானது. ஏனென்றால் இது பரவலாக நடக்கும் ஒரு செயல் என்பதால், பகிஷ்கரிப்பில் பங்குகொள்பவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது அரசுக்கு மிகக் கடினமாக இருக்கும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், அல்லது

பொதுமக்கள் திரளாகப் பங்கு பெறும் பிற வகையான எதிர்ப்புகளை அரசு ஒடுக்கும் நிலை ஏற்பட்டால், அரசியல் கலக்காத எதிர்ப்பு அல்லது பரவலான, கூட்டமாக ஒன்று சேராத எதிர்ப்பு உபாயங்களில் ஒன்றான கட்டணம், வரி செலுத்த மறுப்பு, பொது வேலை நிறுத்தம் ஆகியன இயக்கங்கள் கையாளக்கூடிய உத்திகளாக இருக்கலாம்.

இரண்டாவதாக, எதிர்த் தரப்பினரின் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் திரும்ப அவர்களையே பாதிக்குமாறு செய்யக்கூடிய புது வகையான உத்திகளைக் குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கங்கள் பயன்படுத்துகின்றன. ஒடுக்குமுறையை உலகுக்குத் தெரியப்படுத்துவது, அது தொடர்பான ஆதாரங்களைப் புகைப்படங்கள் மூலமாக, சம்பவங்கள் ஆகியவற்றை உள்நாட்டில் ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர்வது ஆகியன, ஒடுக்குதலை அதிக சிரமமானதாக, அதிக விலை கொடுக்க வேண்டியதாக மாற்றும். இத்தகைய செய்திகளால், இயக்கத்துக்கு ஏற்படும் பாதிப்புகளைவிட, அரசுக்கு ஏற்படும் பாதிப்புகள் மிக அதிகமாக இருக்கும்.

முதலீடுகள் பெறுவது, சர்வதேச அளவில் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுதல் போன்றவை விளவுகளாக இருக்கும். எல்லா ஒடுக்கும் முயறசிகளும், தோல்வியில், எதிர்மறையான பாதிப்பில் முடிவதில்லை. ஆனால், குடிமை எதிர்ப்பு இயக்கங்கள் தாமதப்படுத்தல், நிலைமையைச் சிக்கலாக்குதல், அல்லது ஒடுக்குமுறையின் கொடூரத்தை வெளிப்படுத்தல் போன்றவைகளைச் செய்தால், அவற்றின் விளைவாக, அதிகாரத்தில் இருப்போருக்குப் பொதுமக்கள் மற்றும் சர்வதேச ஆதரவு மிகப் பெரிய அளவில் குறையும்.

மூன்றாவதாக, குடிமைச் சமூக எதிர்ப்பால், பிலிப்பைன்ஸ் (1986), சிலி (1988), செர்பியயா (2000) மற்றும் உக்ரேன் (2004) ஆகிய நாடுகளில் பாதுகாப்புப் படையினர், எதிர்த் தரப்பினருடன் சேர்ந்துகொண்டது போன்ற சம்பவங்களும் நடக்க வாய்ப்புகள் உள்ளன. இதன் மூலம் ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைத் திறனைப் பெருமளவில் குறைக்க முடியும். இது போன்ற பாதுகாப்புப் படையினர் மறுபக்கத்திற்குப் போவது என்பது குடிமைச் சமூக இயக்கங்களின் நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் முயற்சிகளை மேற்கொள்வது மூலம்தான் நிகழ்ந்தது.

### 8. எனது எதிரி, வலியுறுத்தப்பட முடியாதராய் இருந்தால் என்ன செய்வது?

ஒடுக்குமுறைக்குக் காரணமாக இருப்பவர்களில் மிக முக்கியமானவரை நீங்கள், உங்களது நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அவரது மிக முக்கிய ஆதரவாளார்களை ஏற்றுக்கொள்ள வைத்தாலே போதும். குடிமைச் சமூகம் வலுவான இயக்கமாக மாறுவதற்கு மிக முக்கியமான காரணம், ஒடுக்குமுறையை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தங்களின் நடவடிக்கைகளின் மூலம் ஆதரித்து வந்த லட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கைகளிலும், நடத்தைகளிலும் மாறுதல்களைக் கொண்டுவர முடிந்ததுதான். உங்களது எதிர்த் தரப்பின் அதிகாரத்தின் ஆதார சக்தி பலவீனமடைந்தால் போதும். மிக முக்கியமான தனி நபரை உங்களது கருத்தை ஏற்றுக்கொள்ள வைப்பது எனபது பெரிய மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை. ஏனென்றால், அவரது நிலை பலவீனமடைந்த நிலையில் சூழ்நிலை அவரது கட்டுப்பாட்டில் இருக்கப் போவதில்லை என்பதை உணர்ந்த பின், வேறு வழியின்றி புதிய முறைமை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த முன்வருவார்.

உதாரணமாக, தென் ஆப்பிரிக்க நகரமான போர்ட் எலிசபத்தில் (Port Elizabeth) நிற வெறிக்கு எதிரான இயக்கம் 1985ஆம் ஆண்டில், வெள்ளையர் நடத்தும் தொழில், வர்த்தகம் ஆகியவற்றைப் புறக்கணிப்பது என்ற முடிவெடுத்துச்

செயல்படுத்தியது. இதனால் பெரும் நஷ்டங்களை நிறுவனங்கள் சந்திக்க நேர்ந்தது. அதனால் அரசாங்கம் தனது கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று அழுத்தம் தர ஆரம்பித்தனர். இயக்கத்தின் கொள்கைகளை இந்த வர்த்தக நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வைக்க முடியாது போகலாம். ஆனால், அரசாங்கத்தின் அடக்குமுறையைத் தொடர்ந்து ஆதரிப்பதை விட, இயக்கத்தின் சில கோரிக்கைகளையாவது ஏற்றுக்கொள்வதுதான் தங்ளுக்கு நல்லது என்ற உணர்தலை ஏற்படுத்த முடிந்தது.

**9. இந்த முறை வெற்றி பெற நீண்ட காலமாகும். அதுவரை என்னால் காத்திருக்க முடியாத பட்சத்தில் என்ன செய்வது?**

குடிமைச் சமூக எதிர்ப்பு முறை வெற்றி பெற எப்போதும் நீண்ட காலம் பிடிக்கும் என்று சொல்ல முடியாது. சாலிடாரிட்டி (Solidarity) இயக்கம் பத்து வருடங்கள் வரை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. ஆனால், பிலிப்பைனில் எதிர்க் கட்சியினரால் சில வருடங்களிலேயே அந்த நாட்டு சர்வாதிகாரி ஃபெர்டினாண்ட் மார்க்கோஸை வெளியேற்ற முடிந்தது. குடிமைச் சமூக எதிர்ப்பின் வெற்றியைத் தீர்மானிப்பது காலம் அல்ல. அந்த இயக்கம் ஒற்றுமையாக இயங்குகிறதா, சரியான திட்டங்களைக் கட்டமைத்து செயல்படுத்த முடிகிறதா என்பதில்தான் வெற்றியே இருக்கிறது.

**10) நம்மால் எப்படி வெற்றி பெற முடியும்?**

உங்களது இயக்கம், அல்லது பிரச்சாரம், பொதுமக்களின் ஒற்றுமையை உருவாக்க முடிதல், கவனமான திட்டங்கள், அகிம்சை வழிமுறைகளில் கட்டுப்பாட்டுடன் இருத்தல் ஆகியனவற்றை உறுதி செய்தால் வெற்றி பெற அதிக வாய்ப்புகள் இருக்கின்றன.

இயக்க ஒற்றுமை என்பது மிக அவசியமானது. ஏனெனில், பெரும்பாலான மக்களின் விருப்பங்களையும் பற்றுறுதியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குடிமைச் சமூக இயக்கம் மிக சக்தி வாய்ந்ததாக மாறும். இதில் கலந்துகொள்வது என்பது சுயமாக முன்வந்து செய்யும் செயல் என்பதை மறக்கக் கூடாது. மக்கள் இதன் மேல் இருக்கும் நம்பிக்கை காரணமாக, வரக்கூடிய ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல் சேர்கிறார்கள். அதே சமயம், இதில் ஒற்றுமை குறைந்தால், இயக்கத்தின் நோக்கங்கள் தெளிவற்றுப்போகும். அதனால் அவற்றைக் குறித்து  சந்தேகங்களும் உருவாகும். அந்த நிலையில் பலரும் இதில் தொடர்ந்து செயல்பட மாட்டார்கள்.

பொதுவாக, வெற்றிகரமாகச் செயல்படும் குடிமைச் சமூக இயக்கம், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், நடுத்தர வயதுடையவர்கள், வயதானவர்கள், பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள், இனங்களைச் சேர்ந்தவர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், அறிவுஜீவிகள், வர்த்தக சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்று பல தரப்பினரையும் ஒன்றாகக் கொண்டு வரும்.

திட்டமிடுதல் என்பது மிக முக்கியமானது. ஏனெனில் குடிமைச் சமூக எதிர்ப்பு என்பது, பிரச்சாரம், இயக்கம் அல்லது குடிமைச் சமூகக் குழுவுக்கும் அதன் எதிர்த் தரப்பினருக்கும் இடையே நடக்கும் போட்டி. இது போன்ற போட்டியில், அதில் பங்குகொள்ளும் அமைப்பு, அதன் திட்டக் கட்டமைப்பு ஆகியன இயக்கத்தை வடிவமைப்பது, எந்த திசையில் பயணிப்பது போன்றவற்றைத் தீர்மானிக்க வேண்டும். குடிமைச் சமூக எதிர்ப்பு அமைப்பைப் பொறுத்தவரையில், அதன் தலைவர்கள், பல விஷயங்களுக்காகத் திட்டங்கள், உத்திகள் சார்ந்த பல முடிவுகளை எடுக்க வேண்டிவரும். அதாவது அவர்களது வள ஆதாரங்களை எப்படி சிறப்பாக பயன்படுத்துவது, எதிர்த் தரப்பினரது பலவீனங்களை எப்படித் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது, தங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்கொள்ள என்ன செய்வது போன்றவை குறித்து அவர்கள் சிந்திக்க வேண்டும். மிகச் சரியான முடிவுகள் எப்போதுமே உடனடியாக எட்டப்படுவதில்லை. பயனுள்ள திட்டங்கள் உருவாக இரண்டு விதமான அறிவுத் திறன்கள் தேவை.

முதலாவதாக அவர்கள் எதிர்நோக்கும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக நிலைகளைப் பற்றிய விளக்கமான புரிதலுடனான அறிவுடன், சமூகத்தில் உள்ள பல்வேறு குழுக்களின் விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். இரண்டாவதாக, இயக்கங்களின் திட்டங்களை வகுப்பவர்கள், குடிமைச் சமூக எதிர்ப்பு எப்படிச் செயல்படுகிறது எனபதை முறையாக அறிந்து வைத்திருக்க வேண்டும். இதைத் தனிப்பட்ட அனுபவம், திரைப்படங்கள், புத்தகங்கள், வலைதளம், மற்றும் குடிமைச் சமூக எதிர்ப்புப் பணிகளில், அரசியல் செயல்பாடுகளில் அனுபவம் உள்ளவர்களோடு தொடர்புகொண்டு பேசித் தெரிந்துகொள்ளலாம்.

அகிம்சை முறைமை என்பது மிக முக்கியமானது, ஏனெனில், இயக்கத்தின் மூலம் வன்முறை ஏற்பட்டால், அது குடிமைச் சமூக எதிர்ப்பின் தன்மைக்கு இழுக்கு ஏற்படுத்தும். அரசு கடுமையான அடக்குமுறையைப் பிரயோகிப்பதை நியாயப்படுத்த இதுவே காரணமாக அமைந்துவிடும். மேலும் குடிமைச் சமூக இயக்கம் வன்முறையில் ஈடுபட்டால், சாதாரண

மக்கள் அதில் சேரத் தயங்குவார்கள். போலிஸ், ராணுவம் ஆகியோருக்கு எதிராக வன்முறை இருந்தால், ஆட்சியைப் பாதுகாக்கும் இந்த சக்திகளை விரோதம் செய்வது போலாகி விடும். அரசிடம் மக்களுக்குள்ள விசுவாசத்தை மேலும் உறுதி செய்யவே இது உதவும். இயக்கத்தைப் பற்றிய மக்களுக்கு இருக்கக்கூடிய அனுதாபமும் மறைந்து போகும். இது குடிமைச் சமூகம் நினைக்கும் மாற்றங்களை உருவாக்கும் ஆக்க சக்திக்கு எதிரானது. கூடுதல் சுதந்திரம், சமூகத்திலுள்ள அனைவரும் லாபமடையக்கூடிய விதத்தில் எட்டப்படும் சமூக மேம்பாடு போன்ற இலட்சியங்களை முன்னிறுத்தி நடக்கும் போராட்டம், அதற்காக எல்லா விதமான பின்னணி கொண்ட அனைத்துத் தரப்பு சாதாரண மக்களையும் துணிவுடன் திரண்டு வருமாறு அழைக்கும் இயக்கத்தின் செயல்பாடு ஆகியவை, இந்த அரசை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நினைப்பவர்களைப் போலவே அதிகாரத்தில் இருக்கும் அரசை ஆதரித்துத் தாங்கிப் பிடிக்கும் சக்தி உள்ளவர்களில் பலரையும் கவரும்.

மேற்கோள்கள்

“தென்னாப்பிரிக்காவில் மாற்றம் உருவானதின் காரணமே போது ஜன இயக்கம்தான். இதனால்தான், அரசின் மேல் அழுத்தம் உருவானது. கடைசியில், யாரும் கடக்க முடியாத தேக்க நிலை உருவாகி, அரசாங்கத்தால் எந்த வித எதிர்வினையையும் வெளிப்படுத்த முடியாத நிலைக்குச் சென்று கடைசியில் வேறு வழியின்றி மாற்றம் ஏற்பட்டது.” - ஜெனேட் செர்ரி

“எந்தப் போராட்டமாக இருந்தாலும் அதில் முக்கியமான விஷயம் கவனத்தைக் கவருவதுதான். யாருமே உங்களைப் பார்க்க முடியாதபடி ஒரு மூலையில் இருந்துகொண்டு போராடினால், அது வீணான, பயனில்லாத முயற்சி. போராட்டம் என்று நீங்கள் துவங்கினால், எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு கவனத்தைக் கவர்ந்தேயாக வேண்டும்”. - குசிலி ஜாக் (Mkhuseli Jack)

“அகிம்சைச் செயல்பாடுகளில் இருக்கும் கடினமான விஷயம் என்னவென்றால், மிகத் தீவிரமான கட்டுப்பாடு, பயிற்சி, திட்டமிடுதல், சரியான நபர்கள் தேர்வு, ஒரு இயக்கம் உருவாகத் தேவையான பல பணிகளை அடையாளம் கண்டு அவற்றை செய்தல் போன்றவற்றின் அவசியம் குறித்து பலரும் கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லை. இவையெல்லாமே உடனடியாக நடப்பதல்ல. மிகச் சரியாக திட்டமிட்டுதான் செய்ய வேண்டும்” - ரெவ். ஜேம்ஸ் லாவ்சன் ( Rev.James Lawson).

“அதனால்தான், இந்த அடக்குமுறை, நேரெதிரான விளைவை ஏற்படுத்தியுள்ளது. இது நியூட்டனின் மூன்றாவது விதியான வினை - எதிர்வினை போன்றது. நீங்கள் எந்த அளவுக்கு அடக்குமுறையின் தீவிரத்தைக் கூட்டுகிறீர்களோ, அந்த அளவுக்கு எதிர்ப்பும் அதிகமாகும்” - இவான் மரோவிக் (Ivan Marovik)